1970 மார்ச் 20]

திரு. கே. விநாயகம் : தமிழர்களுடைய உணவு நம்முடைய நாட்டிலே *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ. . .

திரு. கே. விநாயகம் : நான் கேள்விக்கு வருகிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சரியில்லை. நீங்கள் சொன்னதை யெல்லாம் எழுதமாட்டார்கள், எழுதவேண்டாம் . .

திரு. கே. விநாயகம் : அதையே வேறு விதமாகப் போடுகிறேன். கோதுமை உணவு தமிழர்கள் உட்கொள்ள வேண்டும் என்று கொள்கை மாற்றம் இப்பொழுது வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோதுமையை உட்கொள்ளக் கூடாது என்று எப்பொழுதும் நாங்கள் சொல்லவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினை எழவில்லை.

திருமயம் தொகுதியில் நடப்பட்ட தென்னைகள்

*460 வினா.—**புலவர் பொ. பொன்னம்பலம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள திருமயம், பொன்னமராவதி, அரிமழம் ஊராட்சி ஒன்றியங்களுக்குள் அடங்கிய ஒவ்வொரு ஊராட்சி மன்றத்தின் சார்பிலும் 1962 முதல் 1966 முடிய நடப்பட்ட தென்னங்கன்றுகளுக்கான செலவு எவ்வளவு?

(இ) எத்தனை தென்னைகள் உயிரோடு இருக்கின்றன?

(உ) எத்தனை ஊராட்சி மன்றங்களில் வெறுங்கணக்கு எழுதப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ)	திருமயம் ஊராட்சி ஒன்றியம் ..	ரூ.	85,360·35
	பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் ..	ரூ.	18,919·36
	அரிமழம் ஊராட்சி ஒன்றியம் ..	ரூ.	30,876·62
	மொத்தம் ..	ரூ.	135,156·33

(இ)	திருமயம் ஊராட்சி ஒன்றியம் ..	2,742 மரங்கள்
	பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம்	1,065 ,,
	அரிமழம் ஊராட்சி ஒன்றியம் ..	1,764 ,,
	மொத்தம் ..	5,571 ,,

(உ) வினாவிற்கு இடமில்லை.